செ.வெ. எண்: 363 நாள்: 23.06.2012

# செய்தி வெளியீடு

நம்நாட்டின் உயிர்நாடியாக விளங்குவது கிராமங்கள் என்பதையும், நாட்டின் முன்னேற்றம், கிராமங்களின் முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது என்பதையும் உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கம் ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதாகும். வறுமையை உருவாக்கும் காரணிகளான வறட்சி, காடுகள் அழிப்பு, மண் அரிப்பு போன்றவற்றைத் தடுக்கும் பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம், இயற்கை ஆதாரங்களின் மேம்பாட்டினை உறுதி செய்து, நிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் துணைக் குறிக்கோளாகும். மேலும், இத்திட்டத்தின் மூலம் நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல், காடு வளர்ப்பு மற்றும் மரம் நடுதல், குளங்கள் மற்றும் ஏரிகளை தூர்வாரல் போன்ற பல்வேறு கிராம நலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு இதுவரை ஊதியமாக ரூ.119/– நிர்ணயம் செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது. இதனை ரூ.132/–ஆக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் தமிழகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் 25 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 23–6–2012